கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண்.47/2015

20.04.2023

பெயர் - சுப்பிரமணி

பி.வா.சா.1

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

1. தாவா வீடு ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் எனது அப்பாவிற்கு பாத்தியம், அதற்கு முன்பு எனது தாத்தா சுப்பையனுக்குப் பாத்தியம். 1933ல் தாவா வீட்டை எனது தாத்தா யாரிடம் கிரையம் பெற்றார் என்றால் எனக்குத் தெரியாது. எனது தாத்தா கிரையம் வாங்கும்போது என்ன விஸ்தீரணத்தில் வாங்கினார் என்றால் கிழமேல் 19.1/2 அடி, தென்வடல் 53அடி. அந்த ஆவணம்தான் பி.வா.சா.ஆ.2 என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை நான் படித்துப்பார்த்தேனா என்றால் எனக்கு போதிய படிப்பறிவு இல்லை, அதனால் எனது வழக்கறிஞர் மூலமாக படித்துத் தெரிந்துகொண்டேன். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்கு மாலாக யாருடைய இடம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

2. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்குமால் குறித்து தற்போதுவரை தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். தாவா வீட்டை எனது தாத்தா 1934ம் வருடத்தில் ஒத்திவைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த 1934 ஒத்திபத்திரத்திலும் மேற்கு மாலாக யாருடைய இடம்

காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது, தற்போது சந்திவீரன் இருக்கிறார். எனது தாத்தா சுப்பையா எனது தந்தைக்கு ஒரு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.4ஆன மேற்கண்ட உயிலில் மேற்கு மாலாக யார் பெயர் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது.

3. பி.வா.சா.ஆ.4 உயிலின் அடிப்படையில்தான் நான் பாத்தியம் கொண்டாடுகிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4ன் குறிப்பிட்டுள்ள விஸ்தீரணம் என்ன என்றால் கிழமேல் 19.1/2 அடி, தென்வடல் 53அடி. கிழமேல் 19.1/2 அடி, தென்வடல் 53அடி-யில் எத்தனையடிக்கு எத்தனையடி வீடு உள்ளது என்றால் பாதி மொட்டமச்சு, பாதி ஓட்டுவீடு, பாதி தாழ்வாரம் (33அடி) போட்டும் உள்ளது, மீதமுள்ள 20அடி காலியிடமாக ஆரம்பத்தில் இருந்தது.ஓட்டுவீடு எத்தனையடி இருக்கும் என்றால் தென்வடல் 11அடி இருக்கும். மொட்டைமச்சு எத்தனையடி இருக்கும் என்றால் தென்வடல் 11 அடி இருக்கும்.

4. நான் சொல்லியுள்ள மேற்கண்ட அடி அளவுகளையும் மொட்டமச்சு , ஓட்டுவீடு, தாழ்வாரம், காலியிடம் உள்ளதையும் எனது பிராதிலும், எதிர்வழக்குரையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் மேலே சொல்லியுள்ளவாறு ஆதியிலிருந்து தற்போதுவரை சொத்தில் அமைப்புகள் உள்ளது, காலியிடத்தில் மட்டும் ஓட்டுவீடு கட்டியுள்ளேன். 20அடியில் எத்தனையடிக்கு ஓட்டுவீடு கட்டியுள்ளேன் என்றால் 17 அடிக்கு கட்டியுள்ளேன், மீத 3அடியை சொந்த நடைபாதையாக பயன்படுத்தி வருகிறேன். தென்வடல் 3அடி அகலமும் கிழமேல்

19.1/2 அடி நீளமும் கொண்ட காலியிடத்தினை சொந்த கிழமேல் நடைபாதையாக புழங்கி வருகிறேன் என்றால் சரிதான். அந்த கிழமேல் நடைபாதைக்கு கிழக்கே நகராட்சிக்கு சொந்தமான தெரு உள்ளது என்றால் சரிதான்.

5. அதன் பெயர் என்ன என்றால் பொன்னுத் தெருவாகும். நான் எனது வீட்டிற்கு போகவேண்டும் என்றால் பொன்னுத்தெரு வழியாக வந்து மேற்கண்ட கிழமேல் நடைபாதை வழியாகத்தான் புழங்க வேண்டும் என்றால் சரிதான், மேற்கேயும் வேறுபாதை உள்ளது. மேற்கண்ட கிழமேல் நடைபாதைக்கும் மேற்கே பூஸ்துதி பாதை உள்ளது என்றால் உள்ளது. அந்த பூஸ்துதி பாதை யார் யாருக்கு பாத்தியம் என்றால் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ள ஜெயராஜ், செல்லையா, ஜெயராஜ்ன் தந்தை குருசாமி, மற்றும் நான் ஆகிய நால்வருக்கும் பாதை பாத்தியம்.

6. 1998ம் வருடம் மாரியப்பன் எழுதிவைத்த உயிலில் மேற்கண்ட பூஸ்துதி பாதையை குறித்து ஏதும் விபரம் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த பூஸ்துதி பாதையில் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல, உள்ளது, அதற்கான ஆதாரமும் என்னிடம் உள்ளது.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.